1992 மார்ச் 9]

ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டாவது பாலத்திற்கும் 100 கிலோ மீட்டர் நீளத்திற்கும் 35 லட்சம் ரூபாய் செலவில் ஒரு தாம்போகி கட்ட மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியச் சாலையையும் இப்படி எடுத்துக் கொண்டால், 35 லட்சம் ரூபாய் என்று எடுத்துக் கொண்டால், அதற்கான நிதியாதாரங்களுக்கு வாய்ப்பு இல்லை. எனவேதான், வருகிற தேவைகளைக் கருதி, இருக்கிற நிலைமைகளைக் கருதி, அங்கே இருக்கிற பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, எவ்வெவற்றிற்கு முக்கியத்துவம் முதலிலே கொடுக்க வேண்டுமோ அவ்வவற்றிற்குக் கொடுத்து, அப்படிப்பட்ட நிலைமைகளை தமிழகம் முழுவதும் எடுத்துக் கொண்டு வருகிறோம். ஆகவே, உறுப்பினர் குறிப்பிட்ட சாலைகளின் முக்கியத்துவத்தைக் கருதி, இது சம்பந்தமான பிரச்சினைகளைப் பரிசிலித்து, நிதியாதாரத்திற்கேற்ப அடுத்த ஆண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 131, திரு. ச. புரட்சிமணி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

131—

கீழ்ஒரத்தூர் கிராமத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*1295 திரு. ச. புரட்சிமணி:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில், கீழ் ஒரத்தூர் என்ற கிராமத்திற்கு கூட்டுக்குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் உள்ள கீழ் ஒரத்தூர் கிராமம், மங்களூர் மற்றும் 24 கிராமங்கள் அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஆய்வில் உள்ளது.

திரு. ச. புரட்சிமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 132, திரு. பே. தர்மலிங்கம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

132—

நியாயவிலைக் கடைகள்.

*1315 திரு. பே. தர்மலிங்கம் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

பொதுமக்கள் உணவுப்பண்டங்கள் நியாவிலைக் கடையில் வாங்க 4 கி.மீ. தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளதால் இதனை மாற்றி உள்ளூரிலேயே நியாவிலைக் கடைகள் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் ஒரு நியாய விலைக்கடை இயங்கி வருகிறது. அப்படி ஏற்கெனவே நியாயவிலை கடை இயங்கி வருகிற கிராமங்களில் ஆறு, காடு, மலை போன்ற இயற்கைத் தடைகள் இருக்குமானால், 3 கிலோ மீட்டருக்கு உள்ளே இருந்தாலும், வேறு புதிய கடைகள் பகுதி நேரத்திலே திறப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் பொது மக்கள் 4 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று நியாயவிலைக் கடைகளில் உணவுப் பண்டங்களை வாங்கி வருகிற கஷ்டம் எல்லாத் தொகுதிகளிலும் இருந்து வருகிறது. குறிப்பாக, பாளையங்கோட்டைத் தொகுதியில் கண்டித்தான்குளம், அடைமிதித்தான் குளம், ஆலங்குளம் ஆகிய கிராமங்களிலுள்ள தாய்மார்கள் சுமார் 4 கிலோ மீட்டர் தூரம் வரை நடந்து சென்று, அங்குள்ள கிராமத்திலுள்ள கடைக்குச் சென்று பொருள் வாங்க வேண்டியிருக்கிறது. எனவே, மேற்கூறிய 3 கிராமங்களையும் இணைத்து, அடைமிதித்தான் குளத்தில் ஒரு நியாய விலைக் கடையை அமைக்க தாயுள்ளம் கொண்ட நம்முடைய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல், ஏழை மக்கள், குறிப்பாக இல்லத்தரசிகள் நடந்து போக